**Deposition of witness**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the court of Judicial Magistrate No.II, Tindivanam.**

**CASE NO. S.T.C.334 /2024**

**Prosecution witness – DW – 1**

| | | | |
|---|---|---|---|
| Date | 30.01.2026 | Calling | |
| Name | வள்ளி | Religion | |
| Father/Husband Name | காளிதாஸ் | Age | 43 |
| Village/City | வேப்பேரி | Caste. | |
| Taluka. | | | |

**Complainant and Accused present**

**குறுக்கு விசாரணை.**

1. நான் தற்பொழுது என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விட்டுக் குடித்தனம் தான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் கண்டக்டராக இருக்கிறார். எனது மகன் என்ன வேலை செய்கிறார் என்றால் படித்துக் கொண்டிருக்கிறார். எனது மகனுக்கு என்ன வயது என்றால் 21 ஆகும். எனது தம்பி என்ன வேலை செய்து வருகிறார் என்றால் ஓட்டுநராக உள்ளார். நான் மற்றும் மேற்சுண்ண நபர்கள் அனைவரும் நிஜாவோ கம்பெனியுடன் ஒரு ஒப்பந்தம் (investment agreement) ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் நான் சென்னையில் வசித்து வருவதாகவும் என்னை அழைத்து மிரட்டியதாக சொல்லி உள்ளது பொய் என்றாலும் நான்

சென்னையில் வசிக்கவில்லை என்றாலும் முறுக்கேறி பகுதியில் தான் வசித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல, சென்னையில் தான் இருந்தேன்.

2. எனது முதல் விசாரணையில் தம்பி சொத்தை விற்க சென்றபோது பிடித்து வைத்து மிரட்டியதாக சொல்லி உடன் மேற்படி சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் எனது தம்பியை தான் கேட்க வேண்டும். 27.09.2021 தேதியில் காத்தவராயன் மற்றும் அரசு ஆகியோர்களிடம் ஒரு கிரைய ஒப்பந்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய உடன்படிக்கையை ரூபாய் 28 லட்சத்து 98 ஆயிரத்திற்கு கிரையம் பேசி உள்ளேன் என்றாலும் முன்பணமாக ரூபாய் 2 லட்சம் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் மீத கிரயத் தொகையை செலுத்தி விட்டேன் அந்த சொத்தை கிரயம் பெற்றுவிட்டேன் என்றாலும் அந்த சொத்து தற்போது எனது பெயரில் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. இடம் என்னுடைய பேரில் உள்ளது அதற்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. என்னை அடித்து மிரட்டி காசோலை வாங்கியதாக சொல்வது தவறு என்றாலும் நானாக தான் எனது வீட்டில் வைத்து காசோலையை கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது நான் தானா என்றால் நான் தான் என்னை மிரட்டி தான் அந்த காசோலையை வாங்கினார்கள்.

3. என்னை யாரும் மிரட்டவில்லை என்றாலும் உண்மையிலேயே என்னை மிரட்டி இருந்தால் நான் காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல காவல்நிலையமும் செல்லக்கூடாது என்றுதான் என்னை மிரட்டினார்கள். நிசாவோ கம்பெனியில் 4 கோடியே 22 லட்சம் மோசடி செய்து விட்டேன் என்றாலும் 91 நபர்களை ஏமாற்றி விட்டதாக காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என் மீது புகார் கொடுக்கப்பட்டு நான்

60% தொகையை திரும்ப செலுத்தி விட்டதாக எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் 15 நபர்களுக்கு 70 லட்சம் வரை திரும்ப செலுத்தி உள்ளேன். நான் தொடர்ந்து அனைவரையும் ஏமாற்றி வருகிறேன் என்றாலும் அதுபோல் தான் மனுதாரரையும் ஏமாற்றியுள்ளேன் என்றாலும் பல நபர்களை ஏமாற்றி அது போல் நான் மனுதாரரையும் ஏமாற்ற முயற்சி செய்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் மோசடி செய்து பல வருஷத்துக்களை வாங்கி உள்ளேன் என்றால் சரியல்ல, அது அனைத்தும் பொய்யாகும். நான் மனுதாரரை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்பட்டு கணினியில் பதிவுசெய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்.